**ஊடக அறிக்கை**

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477421 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2026.09.15 |

# இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2026 ஓகத்து

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2026 ஓகத்தில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் ஆகிய இரண்டிலும் விரிவடைதல்களினை எடுத்துக்காட்டுகின்றன

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு) 2026 ஓகத்தில் 53.0 சுட்டெண் பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது.** இது முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மெதுவான வேகமொன்றிலேனும் தயாரிப்பு நடவடிக்கைகளில் விரிவாக்கமொன்றினைக் குறித்துக்காட்டுகின்றது. தயாரிப்பிற்கானவை நீங்கலாக அனைத்துச் துணைச் சுட்டெண்களும் ஓகத்தில் நடுநிலையான அடிப்படை அளவிற்கு மேல் காணப்பட்டன.

புதிய கட்டளைகள் துணைச் சுட்டெண்ணானது ஓகத்தில் நடுநிலையான அடிப்படை அளவில் காணப்பட்டு, புதிய வியாபார நடவடிக்கைகளின் மட்டங்கள் பரந்தளவில் மாற்றமின்றிக் காணப்பட்டமையினைக் குறித்துக்காட்டியது. அதேவேளை, தயாரிப்புத் துணைச் சுட்டெண்ணில் மிதமடைதலானது புடவைகள் மற்றும் அணியும் ஆடை உற்பத்தித் துறையினால் தூண்டப்பட்டிருந்தது. தொழில்நிலை மற்றும் கொள்வனவுகள் அளவு இரண்டினதும் துணைச்சுட்டெண்கள் ஓகத்தில் அதிகரித்து, ஆண்டின் இறுதிப் பருவகால உற்பத்திக்கான தயாரிப்பில் தொடர்ச்சியான பணியமர்த்தல் மற்றும் கையிருப்புக்களின் படிப்படியான திரட்டுதலைப் பிரதிபலித்தன. அதேவேளை, நிரம்பலர் விநியோக நேரம் துணைச்சுட்டெண் ஓகத்தில் மேலும் நீட்சியடைந்து, தொடர்ச்சியான நிரம்பல்சார் இடையூறுகளினைப் பிரதிபலித்தது.

**கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு**


| மாறி | 2026 யூலை | 2026 ஓக | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **55.0** | **53.0** | **-** | **அதிகரிக்கின்றது, குறைவான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 55.9 | 50.0 | - | அதிகரிப்பிலிருந்து நடுநிலை |
| உற்பத்தி | 54.5 | 48.4 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| தொழில்நிலை | 51.0 | 54.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 51.5 | 54.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 61.5 | 63.0 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தோற்றப்பாடானது அண்மைய கால சவால்களினால் மிதமடையச்செய்யப்பட்டுள்ள போதிலும், பிரதானமாக எதிர்பார்க்கப்படும் ஆண்டின் இறுதிப் பருவகால நடவடிக்கைகளின் மேல்நோக்கிய போக்கு காரணமாக சாதகமாகக் காணப்படுகின்றது.

**கொ.மு.சு**
**தயாரிப்பு**
**2026 ஓகத்து**
**53.0**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு தயாரிப்புத் தொகுப்பு**

| நாடு/அதிகாரஎல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, அதே வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2026 செத்தெம்பர் 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1] எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 2026 ஓகத்தில் 65.6 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து, முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் பணிகள் நடவடிக்கைகளில் துரிதமடைந்த விரிவாக்கமொன்றினை எடுத்துக்காட்டியது.**

பல துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளினால் ஆதரவளிக்கப்பட்டு, வியாபார நடவடிக்கையானது 2026 ஓகத்தில் விரைவான வேகமொன்றில் வளர்ச்சியடைந்தது. போக்குவரத்து, மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் துணைத் துறைகளில் ஏற்பட்ட வலுவான செயலாற்றத்தினால் இவ்வளர்ச்சி முதன்மையாக உந்தப்பட்ட வேளையில், நிதியியல் மற்றும் ஏனைய தனிப்பட்ட பணிகள் துணைத் துறைகளும் குறிப்பிடத்தக்களவு பங்களித்தன.

முதன்மையாக மொத்தவிற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், நிதியியல் மற்றும் ஏனைய தனிப்பட்ட பணிகள் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட விரிவாக்கங்களின் காரணமாக 2026 ஓகத்தில் புதிய வியாபாரங்கள் அதிகரித்தன. தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் துணைத் துறையும் இவ்வதிகரிப்புக்கு சாதகமாகப் பங்களித்தன.

புதிய ஆட்சேர்ப்புக்களினால் ஆதரவளிக்கப்பட்டு, தொழில்நிலை 2026 ஓகத்தில் அதிகரித்தது. அதேவேளை, நிலுவையிலுள்ள பணிகள் 2026 ஓகத்தில் வீழ்ச்சியடைந்து, முன்னைய மாதத்தில் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்பினைத் திரும்பலடையச் செய்தன.

***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***


| மாறி | 2026 யூலை | 2026 ஓக | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **61.4** | **65.6** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய வியாபாரங்கள் | 60.2 | 60.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 52.9 | 53.3 | + | அதிகரிக்கின்றது, உயர்ான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 51.2 | 48.3 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 75.0 | 71.7 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

எதிர்பார்க்கப்படும் பொருளாதார மேம்பாடுகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, 2026 ஓகத்தில் எதிர்வருகின்ற காலாண்டிற்கான பொருளாதார நடவடிக்கைகளின் எதிர்பார்க்கைகள் சாதகமாகத் தொடர்ந்தும் காணப்பட்டன. இருப்பினும், பரந்தளவிலான உலகளாவிய பொருளாதார நிச்சயமற்றதன்மைகள் தோற்றப்பாட்டிற்குக் கீழ்நோக்கிய இடர்நேர்வுகளினைத் தொடர்ந்தும் தோற்றுவித்தன.

**கொ.மு.சு**
**பணிகள்**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**2026 ஓகத்து**
**65.6**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, குறைவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[i], 2026 செத்தெம்பர் 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.
பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.